நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**கரும்புக்கான ஆதரவு விலை டன்னுக்கு ரூ.2,100 ஆக அதிகரிப்பு: முதல்வர் அறிவிப்பு**

First Published : 06 Jan 2012 04:58:56 AM IST

Last Updated : 06 Jan 2012 05:03:04 AM IST



சென்னை, ஜன. 5: கரும்புக்கான ஆதரவு விலையை முதல் கட்டமாக டன்னுக்கு ரூ.2,100 ஆக உயர்த்தி முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

கரும்பு விவசாயிகளுக்கு ஒரு டன்னுக்கு ரூ.1,900, போக்குவரத்துச் செலவு ரூ.100 என மொத்தம் ரூ.2 ஆயிரம் வழங்கப்பட்டு வந்தது. இப்போது டன்னுக்கு ரூ.100 அதிகரிக்கப்பட்டு ரூ.2,100 வழங்கப்படும்.

இதுகுறித்து வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு:

உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையில், முதல் முறையாக மேட்டூர் அணை ஜூன் 6-ம் தேதி திறக்க உத்தரவிடப்பட்டது. திருந்திய நெல் சாகுபடித் திட்டத்தின் மூலம் கூடுதலாக 60 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், துல்லிய பண்ணையம், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றில் உகந்த பயிர் மேலாண்மையைக் கடைப்பிடித்தல், துல்லிய பண்ணையம் முறைகளில் காய்கறிகளைப் பயிரிடுதல், தோட்டக் கலை பயிர்களுக்கான அடர் நடவு முறை என பல புதிய முறைகளை நடப்பாண்டில் தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

மேலும், தமிழகத்தில் நுண்ணீர் பாசனம் அமைத்துப் பயிரிடும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்க உத்தரவிட்டுள்ளேன். வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்காக எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக, கடந்த ஆண்டு 57.92 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த அரிசி உற்பத்தி நடப்பாண்டில் 80 லட்சம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கரும்புக்கான ஆதரவு விலை:** கடந்த ஆண்டு 76.6 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த மொத்த உணவு தானிய உற்பத்தி, நடப்பாண்டில் 115 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரிக்கும் என

எதிர்பார்க்கப்படுகிறது. கரும்பைப் பொருத்தவரையில் கடந்த ஆண்டு 3.1 லட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்ட கரும்பு நடப்பாண்டில் 3.5 லட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக, கடந்த ஆண்டு 342.5 லட்சம் டன்னாக இருந்த கரும்பு உற்பத்தி நடப்பாண்டில் 400 லட்சம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில், கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டும், கரும்புக்கான ஆதரவு விலை உயர்த்தப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை மனதில் கொண்டும், முதல் கட்டமாக இந்த ஆண்டு கரும்புக்கான ஆதரவு விலையை போக்குவரத்து செலவு ரூ.100 உள்பட ரூ.2,100 ஆக உயர்த்த உத்தரவிட்டுள்ளேன்.

**எத்தனால் உற்பத்தி:** எத்தனால் உற்பத்தியைத் தொடங்க 2002-ல் எனது தலைமையிலான அரசு கொள்கை அளவில் முடிவு செய்தது. அதன்படி, 6 தனியார் எரிசாராய வடிப்பாலைகளும், இரண்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் அமைந்துள்ள சாராய வடிப்பாலைகளும் எத்தனால் உற்பத்தியைத் தொடங்கின. இதன் மூலம், 185 லட்சம் லிட்டர் எத்தனால் தயாரித்து எண்ணெய் நிறுவனங்களுக்கு அளித்தன.

எனினும், 2006 இறுதியில் எத்தனால் உற்பத்திக்கான அனுமதியை தி.மு.க. அரசு நிறுத்தி வைத்தது. இதனால் எத்தனால் ஆலைகளை அமைத்துள்ள சர்க்கரை ஆலைகள் இன்னலுக்கு ஆளாகின. எத்தனால் உற்பத்தியினால் அதிக லாபம் ஈட்ட முடியும் என்பதால் கரும்பு விவசாயிகளுக்கு கூடுதல் விலையை வழங்குவது சர்க்கரை ஆலைகளுக்கு எளிதாக இருக்கும்.

எனவே, அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் எத்தனால் உற்பத்தி ஊக்குவிக்கப்படும் எனக் கூறப்பட்டு இருந்தது. அதனை நிறைவேற்றும் வகையில், கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளில் எத்தனால் உற்பத்தியைத் தொடங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்

## 30,000 மரக்கன்றுகள் நடத் திட்டம்

First Published : 05 Jan 2012 02:59:33 PM IST

தஞ்சாவூர், ஜன. 4: தமிழக முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாளான பிப்ரவரி 24-ல் தஞ்சாவூர் மாவட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை சார்பில், 30,000 மரக்கன்றுகள் நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எம்.கே. சுப்பிரமணியன்.

தஞ்சையில் அண்மையில் நடைபெற்ற அனைத்துப் பள்ளிகளின் நாட்டு நலப் பணித் திட்டம், தேசிய பசுமைப் படை, ஜே.ஆர்.சி, சாரணர் இயக்கம் மற்றும் என்.சி.சி. சேவை அமைப்புகளின் ஒருங்கிணைப்பாளர்கள் குழுக் கூட்டத்தில் தலைமை வகித்து அவர் மேலும் பேசியது:

மரக்கன்றுகள் நடுவதற்காக பள்ளிகள் அளவில் பெற்றோர்- ஆசிரியர் கழகம், கிராம கல்விக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்த குழு ஏற்படுத்த வேண்டும். மரக்கன்றுகளின் பராமரிப்பிற்கும் உரிய பாதுகாப்பு உருவாக்க வேண்டும். போதுமான தண்ணீர் வசதி இருக்க வேண்டும்.

கோடைக்காலம் மற்றும் விடுமுறை காலங்களில் மரக்கன்றுகளைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் தேவையான ஏற்பாடுகளை பள்ளிகள் மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

தஞ்சாவூர் மாவட்டக் கல்வி அலுவலர் காதர் சுல்தான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் பா. ராம்மனோகர் வரவேற்றார். மாவட்ட என்.எஸ்.எஸ். தொடர்பு அலுவலர் எஸ். புகழேந்தி நன்றி கூறினார்.

**உரவிலையைக் குறைத்து தட்டுப்பாட்டை போக்கவேண்டும்**

First Published : 05 Jan 2012 12:57:01 PM IST

வேலூர், ஜன. 4: உர விலையை குறைத்து உரத் தட்டுப்பாட்டினை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என வேலூரில் புதன்கிழமை நடைபெற்ற விவசாயிகள் சங்க மாநில செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழக விவசாயிகள் சங்க மாநில செயற்குழுக் கூட்டம் வேலூரில் புதன்கிழமை நடைபெற்றது. மாநிலத் தலைவர் எஸ்.ஏ. சின்னசாமி தலைமை வகித்தார்.

கூட்டத்தில் பேசிய பெரும்பாலான விவசாயிகள் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் நூறுநாள் வேலைத் திட்டத்தால், விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினர். மேலும், இத்திட்டத்தை விவசாயப் பணிகளுக்கு பயன்படுத்தவேண்டும் எனவும், விவசாயிகள் சுட்டிக்காட்டும் நாள்களில் மட்டுமே இதனை செயல்படுத்தவேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: அண்மையில் ஏற்பட்ட தானே புயலால் கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகை உள்ளிட்ட கடலோர மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு விவசாயிகளின் வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு, காப்பீடு வழங்குவதோடு விவசாயப் பணிகளை மீண்டும் தொடங்க மாநில அரசு நீண்டகால வட்டியில்லா கடன் வழங்க வேண்டும்.

கரும்பு வெட்டுக் கூலியை ஆலையே ஏற்றுக்கொண்டு, டன்னுக்கு ரூ. 3000 அடிப்படை விலையாக அறிவிக்கவேண்டும்.

மஞ்சள், பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதியும், மரவள்ளி, ஸ்டார்ச் இறக்குமதிக்கு தடையும் மத்திய அரசு விதிக்கவேண்டும்.

2010 முதல் உர நிறுவனங்களே விலை நிர்ணயம் செய்யும் உரிமை வழங்கப் பட்டுள்ளதால் 200 சதம் விலை உயர்வும், கடுமையான உரம் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. எனவே, உரவிலையை குறைத்து, தட்டுப்பாட்டை போக்க மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மின் திருட்டு தடுப்பு என்ற பெயரில் கால்நடைகளுக்கு தண்ணீர் இறைப்பது போன்ற விவசாயம் சார்ந்த பணிகளுக்கு மின்சாரத்தை பயன்படுத்தும்போது பல்லாயிரக்கணக்கில் அபராதம் விதிக்கும் மின்வாரியத்தின் செயலை செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது. மேலும் தாமதமின்றி மின் இணைப்புகள் வழங்கவேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாநில பொதுச் செயலர் கே. சுந்தரம், மாநில பொருளாளர் கே.பி. வேலுமணி, மாநில செயலர் ஆர். ராஜாசிதம்பரம், வேலூர் மாவட்டத் தலைவர் கே. கண்ணையா நாயுடு, மாவட்டச் செயலர் சி.கே. தனபால் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**தென்னையில் கருந்தலைப் புழு தாக்குதல்: ஆய்வு நடத்திய விஞ்ஞானிகள் குழுவினர்**

First Published : 05 Jan 2012 02:22:59 PM IST

ஈரோடு, ஜன. 4: கருந்தலைப் புழு தாக்குதலால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை, வேளாண் விஞ்ஞானிகள் குழுவினர் ஆய்வு செய்தனர்.

காசிபாளையம் கிராமத்தில் கருந்தலைப் புழு தாக்குதலால் பாதிக்கப்பட்ட தென்னைமரங்களை, ஆழியார் தென்னை ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் கே. ராஜமாணிக்கம், வேளாண் துணை இயக்குநர் அ.மனோகரன், உதவி இயக்குநர்கள் எஸ்.சின்னசாமி, ப.சிதம்பரம், வேளாண்மை அலுவலர் சியாம் சுந்தர் ஆகியோர் கொண்ட குழுவினர் ஆய்வு செய்தனர்.

தென்னை சாகுபடி விவசாயிகள் பாலசுப்ரமணியன், செல்வராஜ், தங்கமுத்து, சத்தியமூர்த்தி ஆகியோரது வயல்களில் சுமார் 420 மரங்களில் கருந்தலைப் புழு தாக்குதல் காணப்பட்டது. வேளாண் துறை மூலம் இப் பகுதியில் 41 ஆயிரம் ஒட்டுண்ணிகள் (பிரோகனிட்) நோய் தாக்கிய மரங்களுக்கு விடப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்த மரங்களுக்கு மோனோகுரோட்டோபாஸ் பூச்சி மருந்து வேர் மூலம் செலுத்தப்பட்டு நன்கு கட்டுப்படுத்தப்பட்டு விட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். இப்போது புதிதாக எந்தத் தாக்குதலோ, கருந்தலைப் புழுவோ இல்லை என ஆய்வில் அறியப்பட்டது.

கருந்தலைப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்தும் முறை குறித்து ராஜமாணிக்கம் விளக்கம் அளித்தார். ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறையில் புழு தாக்குதல் காணப்பட்டால் வயதான மரங்களுக்கு மோனோகுரோட்டோபாஸ் அல்லது அசாடிராக்டின் மருந்து 10 மில்லியுடன் 10 மி.லி தண்ணீரில் கலந்து வேர் மூலமாகச் செலுத்த வேண்டும்.

நோய் தாக்கிய சிறிய மரங்களுக்கு டைகுளோராவாஸ் 2 மில்லி அல்லது அசாடிராக்டின் 5 மில்லியை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து ஓலைகளின் இரண்டு புறமும் நன்கு படும்படி தெளிக்க வேண்டும். வேர் மூலம் மருந்து செலுத்திய பின் ஒருமாதம் கழித்து மரம் ஒன்றுக்கு 30 பிராக்கோனிட் ஒட்டுண்ணியை மரத்தின் மட்டைக்கிடையில் 21 நாட்கள் இடைவெளியில் தொடர்ந்து 4 முறை விட வேண்டும். கருந்தலைப் புழு தாக்கிய மட்டைகளை வெட்டி அப்புறப்படுத்தி எரித்து விட வேண்டும். இரவு நேரங்களில் விளக்குப் பொறி வைத்து அந்துப்பூச்சிகள் நடமாட்டத்தைக் கண்காணிக்க வேண்டும். கருந்தலைப் புழுவைக் கட்டுப்படுத்த அனைத்து விவசாயிகளும் ஒருங்கிணைந்த பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்து கட்டுப்படுத்தலாம் என்றார் ராஜமாணிக்கம்.

**பயிர் பாதிப்பு கணக்கெடுப்பு பணி தொடங்கியது**

First Published : 05 Jan 2012 11:17:26 AM IST

பண்ருட்டி, ஜன. 4: அண்ணாகிராமம் ஒன்றியப் பகுதியில் புயலால் பாதிக்கப்பட்ட பயிர்களை கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அண்ணாகிராமம் ஒன்றியப் பகுதியில் புயலால் சேதம் அடைந்த விவசாயம் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களை பதிவு செய்யும் பணியும், ஆய்வு செய்யும் பணியும் நடைபெற்று வருகிறது. வேளாண்மை பயிர்கள் சேதமடைந்த கீழ்கண்ட கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் அதன் அருகே உள்ள கைபேசி எண்ணை தொடர்பு கொண்டு பதிவு செய்துகொள்ளலாம். திருக்கண்டேஸ்வரம்-9626811859, நெல்லிக்குப்பம்-9629983344, பாலூர்-9894376701, புதுப்பேட்டை-9751033588, கரும்பூர்-9655229079, அண்ணாகிராமம்-9865737440, 9486985234,9245202762.

தோட்டக்கலைப் பயிர்: திருக்கண்டேஸ்வரம்-9965945022, பாலூர்-9578290378, புதுப்பேட்டை-9790179548, கண்டரக்கோட்டை-9865244219, தோட்டக்கலை உதவி இயக்குநர்-9442865289.

**மானிய விலையில் பம்ப்செட்**

First Published : 05 Jan 2012 11:57:57 AM IST

திருவாடானை, ஜன. 4: திருவாடானை தாலுகா ஆர்.எஸ்.மங்கலம் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில், தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் பம்ப்செட் வழங்கும் விழா நடைபெற்றது.

ஒன்றியக் குழு தலைவர் வ.து.ந.ஆனந்த் தலைமை வகித்து, பம்புசெட் வழங்கினார். சித்தூர்வாடி ஞானப்பிரகாசம், தெற்குனேந்தல் கர்ணன், காவனக்கோட்டை புத்திருள் ஆகியோர் மானிய விலையில் பம்ப்செட் பெற்றனர்.

விழாவில் வேளாண் உதவி இயக்குநர் முகம்மது அப்துல் நசீர் திட்டத்தை பற்றி விளக்கினார். அரசு அங்கீகாரப்படி 4 ஹெச்பி முதல் 10 ஹெச்பி வரை மானிய விலையில் பம்ப் செட் விநியோகம் செய்யப்படுகிறது. உரிய பங்குத் தொகையினை செலுத்தி முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றார் அவர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**புண்ணாக்கு ஏற்றுமதி 38 லட்சம் டன்**

ஜனவரி 06,2012,00:38



கோல்கட்டா:நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான காலத்தில், புண்ணாக்கு ஏற்றுமதி, 38 லட்சத்து 68 ஆயிரத்து 831 டன்னாக அதிகரித்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட, 23 சதவீதம் (31 லட்சத்து 47 ஆயிரத்து 512 டன்) அதிகமாகும்.சென்ற டிசம்பர் மாதத்தில், 9 லட்சத்து 53 ஆயிரத்து 526 டன் புண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, கடந்த 2010ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், 7 லட்சத்து 65 ஆயிரத்து 954 டன்னாக இருந்தது.

கரீப் பருவத்தில் சோயா உற்பத்தி அதிகரிப்பு, பிழி திறன் உயர்வு, அமெரிக்க டாலருக்கு எதிரான

ரூபாயின் வெளி மதிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆகியவற்றால், புண்ணாக்கு ஏற்றுமதி அதிகரித்துள்ளது.

மதிப்பீட்டு காலத்தில், 9 லட்சத்து 8 ஆயிரத்து 809 டன் சோயா புண்ணாக்கு, 29 ஆயிரத்து 508 டன் கடுகு புண்ணாக்கு உட்பட மொத்தம், 9 லட்சத்து 38 ஆயிரத்து 317 டன் புண்ணாக்கு, ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, முந்தைய நிதியாண்டின் இதே காலத்தில், 8 லட்சத்து 49 ஆயிரத்து 370 டன்னாக இருந்தது.

வியட்நாம் நாட்டிற்கான புண்ணாக்கு ஏற்றுமதி, 5 லட்சத்து 42 ஆயிரத்து 676 டன்னிலிருந்து, 7 லட்சத்து 472 டன்னாக அதிகரித்துள்ளது. இதில், 5 லட்சத்து 38 ஆயிரத்து 602 டன் சோயா புண்ணாக்கும், 36 ஆயிரத்து 245 டன் கடுகு புண்ணாக்கும், 1 லட்சத்து 25 ஆயிரத்து 625 டன் தவிட்டு புண்ணாக்கும் அடங்கும்.தென் கொரியாவிற்கான புண்ணாக்கு ஏற்றுமதி, 3 லட்சத்து 60 ஆயிரத்து 172 டன்னிலிருந்து, 5 லட்சத்து 53 ஆயிரத்து 795 டன்னாக அதிகரித்துள்ளது. இதில், 2 லட்சத்து 93 ஆயிரத்து 276 டன் கடுகு புண்ணாக்கு, 2 லட்சத்து 30 ஆயிரத்து 673 டன் ஆமணக்கு புண்ணாக்கு, 29 ஆயிரத்து 846 டன் சோயா புண்ணாக்கு ஆகும்.

ஐரோப்பா மற்றும் இதர நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட புண்ணாக்கு இறக்குமதி, 1 லட்சத்து 40 ஆயிரத்து 83 டன்னிலிருந்து, 1 லட்சத்து 70 ஆயிரத்து 863 டன்னாக அதிகரித்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட புண்ணாக்கு ஏற்றுமதி, 2 லட்சத்து 58 ஆயிரத்து 65 டன்னிலிருந்து, 4 லட்சத்து 37 ஆயிரத்து 151 டன்னாக உயர்ந்துள்ளது.

**வரத்து அதிகரிப்பால் மக்காச்சோளம் விலை வீழ்ச்சி**

ஜனவரி 06,2012,00:36



சேலம்:சேலத்தில் மக்காச்சோளம் எனப்படும், சோளக் கதிர் வரத்து அதிகரிப்பால், விலை குறைந்துள்ளது.சேலம் மாவட்டம் சங்ககிரி, நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு, கொக்கராயன் பேட்டை, வெப்படை, ஈரோடு மாவட்டம் அந்தியூர், சத்தியமங்கலம், பருவாச்சி, பவானி, மலைப்பகுதி, கடம்பூர் ஆகிய இடங்களில் மானாவாரி நிலத்தில் விவசாயிகள் மக்காச்சோளம் பயிரிட்டு வருகின்றனர்.வானம் பார்த்த பூமியாக இங்குள்ள நிலங்கள் உள்ளன. இரண்டு முறை மழை பெய்தால் போதும், மக்காச்சோள பயிர்கள் மகசூல் அதிகரித்துவிடும். சென்ற ஆண்டு அதிகளவு மழை பெய்ததால், மக்காச்சோள உற்பத்தி இரு மடங்காக உயர்ந்துள்ளது.

அந்தியூர் மற்றும் சத்தியமங்கலத்தில் விளையும் மக்காச்சோளம், லாரி லாரியாக சேலம், கோவை, ஆத்தூர், கள்ளக்குறிச்சி, ஈரோடு ஆகிய நகரங்களில் உள்ள பெரிய மார்க்கெட்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. சேலம் திருமணிமுத்தாறு ஓடை அருகே மக்காச்சோளம் விற்பனை செய்வதற்காக மலை போல் குவித்து வைக்கப்பட்டுள்ளது.

2010ம் ஆண்டை விட, சென்ற 2011ம் ஆண்டு மக்காச்சோளம் வரத்து அதிகரித்துள்ளது. முன்பு 10 ரூபாய்க்கு 5 மக்காச் சோளம் விற்கப்பட்டது. தற்போது, 10 ரூபாய்க்கு 10 மக்காச்சோளம் விற்பனை செய்யப்படுகிறது. பாப்கார்ன் வியாபாரிகள் அதிகளவு, மக்காச்சோளங்களை வாங்கி செல்கின்றனர். கோழிகளுக்கு தீவனமாகவும் மக்காச்சோளம் பயன்படுகிறது. மக்காச்சோளத்தின் மேல் பகுதி சருகுகளை ஆடுகள் விரும்பி சாப்பிடும். ஒரு ரூபாய்க்கு ஒரு மக்காச்சோளம் விற்பதால், பலர் போட்டி போட்டு வாங்கி செல்கின்றனர். மக்காச்சோளம் விலை குறைந்துள்ளதால் வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறுவதாக வணிகர்கள் தெரிவித்துள்ளனர்.

**புத்தாண்டில் உணவுப்பணவீககம் கடும் சரிவு**

ஜனவரி 05,2012,15:30



புதுடில்லி: புத்தாண்டின் முதல் உணவுப்பணவீக்க அறிக்கையை இன்று மத்திய அரசு வெளியிட்டது. இதில், கடந்த வாரத்திற்கான உணவுப்பணவீக்கம் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு கடுமையாக சரிவடைந்துள்ளது. டிசம்பர் 24வுடன் முடிவடைந்த வாரத்தின் நாட்டின் உணவுப்பணவீக்கம் -3.36 சதவீதமாக உள்ளது. இது கடுந்த 6 வருடங்களில் இல்லாத அளவிற்கு கடுமையான பணவீக்க சதவீதமாகும். இது நாட்டின் வளர்ச்சியை காட்டுவதாக மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.
வெங்காயம், உருளைக்கிழங்கு உள்ளிட்ட அத்தியாவசிய காய்கறிகளின் விலைகள் கடுமையாக குறைந்ததால் உணவுப்பணவீக்கம் -3.36 சதவீதம் என்று மைனஸ் அளவுக்குக் குறைந்தது.இதற்கு முந்தைய வாரத்தில் உணவுப்பணவீக்கம் +0.42% இருந்தது குறிப்பிடத்தக்கது. இரண்டு ஆண்டுகளாக இரட்டை இலக்கத்தில் இருந்து கவலை அளித்து வந்த உணவுப்பணவீக்க விகிதம் கடந்த ஒன்றரை மாதங்களில் சரிந்தபடியே இருந்து வந்தது. முதன் முதலாக தற்போது உணவுப் பணவாட்டமாக மாறியுள்ளது. இருப்பினும் மொத்த விற்பனை விலைகள் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் ஒட்டுமொத்த பணவீக்கம் 9.11%ஆக இருந்து வருகிறது.

**மாட்டுப்பாட்டியில் ஹைடெக் பால் பண்ணை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2012,23:19 IST

கருத்தை பதிவு செய்ய

மூணாறு : மாட்டுப்பட்டியில் செயல்பட்டு வரும் கேரள அரசுக்கு சொந்தமான பால் பண்ணை ரூ. 7.5 கோடி செலவில் "ஹை டெக்' வசதிகளுடன் அமைக்கப்பட்டு வருகிறது. மூணாறு அருகே மாட்டுப்பட்டியில் கேரள அரசின் கால்நடை மற்றும் பால் உற்பத்தி வாரியத்திற்கு சொந்தமான "இன்டோ-சுவீஸ்' பால் உற்பத்தி பண்ணை செயல்படுகிறது. பால்உற்பத்தியுடன்,காளைகளில் இருந்து உயிர் அணுக்கள் சேகரிக்கப்பட்டு பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப் படுகிறது. தற்போது தினமும் 800 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த பால் பண்ணை ரூ.7.5 கோடி செலவில் நவீன தொழில் நுட்பத்தில் "ஹை டெக்' வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. ஜெர்மனியில் இருந்து பல்வேறு உபகரணங்கள் கொண்டு வரப்பட்டு இறுதி கட்ட பணிகள் நடக்கிறதுது. ஒரே நேரத்தில் 12 பசுக்களுக்கு பால் கறக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. நவீனமயமாக்கப்பட்ட பண்ணை வரும் மார்ச் முதல் செயல் பட தொடங்கும். தினமும் 2500 லிட்டர் பால் உற்பத்தி செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.

**நெற்பழ நோய் தாக்குதல்: ஆய்வுக்கு ஐதராபாத் விஞ்ஞானிகள் வருகை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2012,22:59 IST

கருத்தை பதிவு செய்ய

ராமநாதபுரம் : ராமநாதபுரம், அம்பாசமுத்திரம், ஆடுதுறை ஆகிய ஊர்களில் நெற்பழநோய் குறித்து ஆய்வு செய்ய ஐதராபாத்தில் இருந்து தேசிய நெல் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் வருகின்றனர். தற்போது பகலில் அதிக வெப்பம், இரவில் அதிகளவு பனிப்பொழிவும் உள்ளது. இதனால் "நெற்பழம் நோய்' கிருமிகள் காற்று மூலம் பரவுவதால், அதிகளவில் தாக்குதலுக்கு உள்ளான பயிர்கள், தழைச்சத்தை மண்ணிலிருந்து எடுக்க முடியாமல், மஞ்சள் நிறத்துடன் காணப்படுகிறது.

இதை களைய மோனோ குரோடோபாஸ், குளோர் பைரிபாஸ், டை குளோர்வாஸ், அசிபேட், இமிடாகுளோபிரிட், அசாடிரக்டின் ஆகிய பூச்சிக் கொல்லி மருந்துகளை அதிகாரிகள் பரிந்துரைத்து வருகின்றனர். தமிழகம் முழுவதும் இதன் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. இதை கட்டுப்படுத்தும் வழிகளை ஆராய ஐதராபாத், தேசிய நெல் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் அம்பாசமுத்திரம், ராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறை உள்ளிட்ட இடங்களில் ஆய்வு நடத்துகின்றனர்.

**வேளாண் ஆராய்ச்சியாளர்களுக்கு உத்தரவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2012,22:58 IST

கருத்தை பதிவு செய்ய

ராமநாதபுரம் : வேளாண் ஆராய்ச்சியாளர்களும் விவசாயிகளை சந்தித்து, அவர்களின் குறைகளை களைய வேண்டும், என அரசு உத்தரவிட்டுள்ளது. வேளாண் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிக்கும், புதிய ரக விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகளை வேளாண் பல்லை ஆய்வு செய்து, விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி வருகிறது. தற்போது வேளாண்மையை பெருக்கும் விதமாக அனைத்து அதிகாரிகளும், விவசாயிகளிடம் நேரடி தொடர்பு கொள்ள வேண்டும், என அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி தமிழகத்தில் உள்ள 14 ஆராய்ச்சி நிலையங்களின் உளவியல், மண்ணியல், பூச்சியல், தோட்டக்கலை ஆகிய துறைகளின் ஆராய்ச்சியாளர்களும், விவசாயிகளிடம் நேரடியாக சந்திக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**உரங்களில் கலப்படம்; அதிக விலைக்கு விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2012,22:31 IST

கருத்தை பதிவு செய்ய

விருதுநகர் : உரங்களில் கலப்படம் செய்து, அதிக விலைக்கு விற்பனை செய்வதாக, விருதுநகரில் நடந்த விவசாயிகள் குறை கூட்டத்தில் புகார் தெரிவிக்கப்பட்டது. விருதுநகர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் சிறப்பு குறை தீர்ப்பு கூட்டம் நடந்தது. இதில் கலந்து கொள்ள வந்த விவசாயிகள், கலப்படம் செய்யப்பட்ட உரங்களுடன் வந்தனர்.

கூட்டத்தில் பேசியஅவர்கள், ""உரங்களில் கலப்படம் அதிகரித்துள்ளது. இதை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் தயங்குகின்றனர். விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியத்தை, விசாயிகள் போர்வையில், கலப்பு உரம் தயாரிக்கும் நிறுவனங்கள் பெற்று வருகின்றன. பல முறை புகார் தெரிவித்தும் இன்று வரை நடவடிக்கை இல்லை. உரங்களை குறிப்பிட்ட விலையை காட்டிலும், கூடுதல் விலைக்கு விற்பனை செய்கின்றனர்.

மேலும், அனுமதிக்கப்படாத கிடங்குகளில் பதுக்கி, வெளி மாவட்டங்ளுக்கு கடத்தி அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர்,' என்றனர். விசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ராமச்சந்திரராஜா ,""உரங்களில் கலப்படம் செய்வதால், மண்ணின் தன்மை கெட்டு பாதிக்கிறோம். டி.ஏ.பி., உரங்களில் கலப்படம் செய்யப்பட்ட உரத்தை எடுத்து வந்துள்ளோம். இதன் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, விவசாயிகளுக்கு நியாயம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

---

## *பல ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வீழ்ச்சி உணவு பணவீக்கம் –3.36 சதவீதம்*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*டிசம்பர் 24–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பணவீக்கத்தில் கடந்த பல ஆண்டுகளுக்கு பிறகு 3.36 சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளது.*



மொத்த விலை

2010–ஆம் ஆண்டில் 20 சதவீதத்தை தாண்டி இருந்த உணவு பணவீக்கம் 2011–ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து படிப்படியாக குறையத் தொடங்கி டிசம்பர் 17–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 0.42 சதவீதமாக இருந்தது. இந்த உணவு பணவீக்கம் மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. இந்த குறியீட்டு எண்ணில் தற்போது பல ஆண்டுகளுக்கு பிறகு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் உணவு பணவீக்கத்தின் பங்கு 14 சதவீதம் ஆகும். தற்போது உணவு பணவீக்கம் சரிவு பாதைக்கு சென்றுள்ளது. இது தொடர்ந்து நீடித்தால், நடப்பு நிதி ஆண்டில் பொது பணவீக்கம் 6 சதவீதமாக குறையும் என மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி நம்பிக்கை தெரிவித்துள்ளார். இப்பணவீக்கம் மார்ச் மாதத்திற்குள் 7 சதவீதமாக குறையும் என பிரதம மந்திரியின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் தலைவர் சி.ரங்கராஜன் தெரிவித்துள்ளார்.

2010 டிசம்பரிலிருந்து இந்த பணவீக்கம் 9 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்து வருகிறது. இதனை கட்டுப்படுத்தும் வகையில், பாரத ரிசர்வ் வங்கி 2010 மார்ச் மாதத்திலிருந்து 13 முறை முக்கிய கடன்களுக்கான வட்டியை உயர்த்தியது. 2011 டிசம்பர் 16–ந் தேதி வெளியிட்ட பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில் இந்த வட்டி விகிதங்கள் எதையும் உயர்த்தவில்லை. உணவு பணவீக்கம் குறைந்ததையடுத்து இம்மாதம் 24–ந் தேதி வெளியிடும் பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில் இவ்வங்கி முக்கிய கடன்களுக்கான வட்டியை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெங்காயம்

டிசம்பர் 24–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் ஓர் ஆண்டு கால அடிப்படையில் வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு விலை முறையே 73.74 சதவீதம் மற்றும் 34.01 சதவீதம் குறைந்துள்ளது. ஒட்டுமொத்தத்தில் காய்கறி விலை 50.22 சதவீதம் சரிந்துள்ளது. கோதுமை

விலை 3.41 சதவீதம் குறைந்துள்ளது.

சரிவுக்கு காரணம்

கரீஃப் பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி நன்றாக இருந்ததும், உணவு பணவீக்கம் சரிந்ததற்கு ஒரு காரணமாகும். அதேசமயம், கடந்த 2010–ஆம் ஆண்டின் இதே வாரத்தில், உணவு பணவீக்க குறியீட்டு எண் 21 சதவீதமாக மிகவும் உயர்ந்து இருந்தது. எனவே, இதனுடன் ஒப்பிடும்போது உணவு பணவீக்கம் சரிவடைந்துள்ளதாக தோன்றுகிறது என பொருளியல் நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பருப்பு – பால்

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொண்ட வாரத்தில் பருப்பு வகைகள் மற்றும் பால் விலை முறையே 13.85 சதவீதம் மற்றும் 9.49 சதவீதம் உயர்ந்துள்ளது. முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 13.82 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், பழங்கள் மற்றும் தானியங்கள் விலை முறையே 10.87 சதவீதம் மற்றும் 1.97 சதவீதம் உயர்ந்துள்ளது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், எரிபொருள் பணவீக்கம் 14.37 சதவீதத்திலிருந்து 14.60 சதவீதமாக உயர்ந்துள்ளது.